# அம்பாரை மாவட்ட முஸ்லீம் மக்களது வாழ்வியலில் காணப்படும் கலைவடிவங்கள்

**தங்கராசா கோபிநாத்**

இசைத்துறை, சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம். கிழக்குப் பல்கலைக்கழகம்.

*kopinathth89@gmail.com*

***ஆய்வுச்சுருக்கம்:*** *அம்பாரை மாவட்டத்தில் பல்லின சமூக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களது சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தங்களது வாழ்வியலை நடாத்தி வருகின்றனர். இவர்களது வாழ்வியல் அல்குரான், ஹதீஸ் என்பவற்றில் கூறப்பட்ட கருத்துக்களை பிரதானமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதனை கள ஆய்வு மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இவர்களது வாழ்வியலில் நாட்டுக்கவிகள், நாட்டார் பாடல்கள், மாப்பிள்ளை பைத் (மாப்பிள்ளை வாழ்த்துப் பாடல்), களிகம்பு ஆட்டப்பாடல்கள், முனாஜாத்துப்பாடல்கள், நாடகப்பாடல்கள், இஸ்லாமியகீதங்கள், கவ்வாலி கீதங்கள், காவியங்கள், கப்பல் பாடல், பதம் பாடுதல், குரவை போடுதல் வசன நாடக அரங்குகள் என ஏராளமான கலைவடிவங்கள் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. தற்காலத்தில் அக்கரைப்பற்று, கல்முனைக்குடி, மருதமுனை, இறக்காமம், அட்டாளைச்சேனை போன்ற முஸ்லிம் ஊர்களில் இக்கலைகள் பயில் நிலையில் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் பார்க்கின்ற போது ஏனைய முஸ்லிம் ஊர்களில் கலைகளின் மீது இரசனை, ஈடுபாடு, ஆற்றுகை என்பன குறைவாகவே காணப்படுகின்றன. இவ் ஆய்வுக்கட்டுரை முஸ்லிம் மக்களது கலைவடிவங்களை மீள்பார்வை செய்வதற்காகவும், வளர்த்து எடுப்பதனையும், ஆவணப்படுத்துவதனையும் ஆய்வு நோக்காகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இஸ்லாமிய சமயத்தில் கலைகளுக்கான பதிவுகள் குறைவாக காணப்படுகின்றன. ஆனால் யதார்த்த வாழ்வியலில் கலைவடிவங்களின் நிலவுகை அதிகமாக காணப்படுகின்றன. இவ் ஆய்வானது களஆய்வு, விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, சமூகவியல் ஆய்வு போன்ற ஆய்வியல் அணுகுமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுன்றது. இவ் ஆய்வானது அம்பாரை மாவட்டத்தில் காணப்படும் முஸ்லிம் கிராமங்களை ஆய்வு எல்லையாக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. கள ஆய்வில் பெறப்பட்ட கலைஞர்களது நேர்காணல்கள்,ஆய்வேடுகள் என்பன முதன்மை மூலாதாரங்களாகவும் முஸ்லீம் கலை வடிவங்களின் ஆற்றுகை இறுவட்டுகள், ஒலிப்பதிவு நாடாக்கள் என்பன துணைமை மூலாதாரங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ் ஆய்வுக்கட்டுரையின் கருதுகோளாக இஸ்லாமிய சமூகத்தினரை அடையாளப்படுத்தும் கலைவடிவங்கள் இன்றும் பயில் நிலையில் காணப்படுகின்றன என்பதாகும்.*

**திறவுச்சொற்கள்:** களிகம்பாட்டம், கலைவடிவங்கள், அறிவிப்புச்சமிஞ்சை, மாப்பிள்ளை பைத், வட்டாரவழக்கு

## 1. அறிமுகம்

இஸ்லாமிய சமூகத்தில் காணப்படுகின்ற இனக்குழுக்களான மூர், மலாயர், மெமன் போன்றவற்றில் மூர் மக்கள் அதிகமாக கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்றனர். அம்பாரை மாவட்டத்தில் காணப்படும் முஸ்லிம் மக்கள் தங்களது வாழ்வியலில் தமது சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து வருகின்றனர். இதனால் இவர்களது கலை, கலைப்படைப்புக்கள், கட்டிட, சித்திர வேலைப்பாடுகள், இரசனை அனைத்தும் இஸ்லாமியக்கருத்துக்களையும், இஸ்லாமியக்கோட்பாடுகளையும் உள்வாங்கியும் சிறிதளவு லௌகீகத்தை தழுவியும்(நாட்டுக்கவிகள்) காணப்படுகின்றன. அதே நேரத்தில் மத்திய கிழக்கு நாடுகளிலும், வட இந்திய முஸ்லிம்களிடமும் காணப்படும் இசைமரபுகள், கலைமரபுகள் அம்பாரை மாவட்ட கலை வடிவங்களில் முற்றிலும் வேறுபடுகின்றன. அதே நேரத்தில் அம்பாரை மாவட்டத்தில் காணப்படும் தமிழ் மக்களது வசந்தன் ஆடல், நகரசங்கீர்த்தனம், திருபள்ளயெழுச்சி ஊர்வலம், என்பன களிகம்பு ஆடல், முனாஜாப்பாடல் என்பனவற்றை ஒத்து காணப்படுகின்றன. அதே நேரத்தில் கருப்பொருளில் வித்தியாசமும், சில ஆட்ட முறைகளிலும், பயன்படுத்தப்படும் சில இசைக்கருவிகளிலும் சிறிதளவு வித்தியாசம் காணப்படுகின்றன.

### அம்பாரை மாவட்ட முஸ்லிம் மக்களது கலைவடிவங்கள்

அம்பாரை மாவட்டத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். அவர்களிடம் இருக்கும் சில பழக்கவழக்கங்கள், சில சம்பிரதாயங்கள் என்பன

மாறிமாறி பின்பற்றி வந்துள்ளனர் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். அந்தவகையில் கலை, பண்பாடு, பாரம்பரியங்கள், கலைவடிவங்கள், மரபுகள், சடங்குகள் , உணவு கலாசாரம் என்பவற்றை அவற்றிற்கு உதாரணங்களாகக் கூறமுடிகின்றது.

கலை வடிவங்கள் என்பது ஒரு சமூகத்தினரின் விருப்பு, வெறுப்புகளை பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்படும். அவை இரசனையை ஏற்படுத்தக் கூடியதாகவும் மக்களது மனங்களில் ஒரு வித புத்துணர்ச்சியை ஏற்படுத்த வல்லதாகவும் காணப்படும். மற்றும் ஒரு செய்தியை தெரிவிக்கும் வகையிலும், ஆடல், பாடல், பேச்சு, கருத்தாடல், என்பவற்றை கொண்ட நுண்கலைகளின் துணையுடன் சமூதாயத்தின் இரசனைக்கு ஏற்ப மாறுபடக் கூடியதாகவும் காணப்படுபவை கலைவடிவங்கள் என கூறலாம்.

பொதுவாக அம்பாரை மாவட்ட முஸ்லிம்களிடம் காணப்படும் கலை, இசை, நடன, நாடக முறைகள் தமிழர்களின் கலைமரபுகளில் சில விடயங்களில் ஒத்ததாகவும் பல விடயங்களில் வேறுபட்டு நிற்கின்றன. ஆனால் அதில் காணப்படும் கருத்துக்கள் என்பன இஸ்லாமிய சமயம், நபிகளது வாழ்க்கைக்கோலங்கள், இறைதுாதர்களின் பொன்மொழிகள், அல்குரானில் கூறப்படும் தகவல்கள் என்பவற்றை உட்புகுத்தி தங்களது சமூகத்திற்கு ஏற்றாற்ப்போல் இசை,கலை வடிவங்களை வடிவமைத்துள்ளனர். இவர்களது வாழ்வியலில் காணப்படும் கலைவடிவங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. நாட்டுக்கவிகள்
2. நாட்டார் பாடல்கள்
3. மாப்பிள்ளை பைத்
4. களிகம்பு ஆட்டம்
5. முனாஜாப்பாடல்கள்
6. நாடகப்பாடல்கள்
7. இஸ்லாமியப்பாடல்கள்
8. கவ்வாலி இசை
9. காவியங்கள்
10. வழிநடைச்சிந்துப்பாடல்
11. கப்பல்பாடல்
12. பதம்பாடுதல்

**களிகம்பாட்டம்**

அம்பாரை மாவட்ட முஸ்லிம் மக்களிடம் காணப்படும் ஆடல்முறை களிகம்பாட்டம் ஆகும். இது கோலாட்டம், வசந்தன் ஆடல் என்பவற்றிற்கு இணையாக காணப்படுகின்றன. களி என்பது மகிழ்ச்சியினையும் கம்பு என்பது கோல், தடி என்பதனயும் சுட்டுவதனால் ஒரு நிகழ்விற்கு மகிழ்ச்சியை வழங்குகின்ற ஆடலே களிகம்பு ஆடல் எனப்படுகின்றது. இதனை கம்படி, கள்ளி, பொல்லடி, களிகம்பு, களிக்கம்பு என பலவாறாக அழைக்கின்றனர். களிகம்பு ஆட்டத்தில் பாடப்படும் பாடல்கள், ஆட்டக்காரர்கள், நெறிப்படுத்துகின்ற அண்ணாவிமார் ஆகிய மூன்று விடயங்களும் மிகவும் முக்கியமான அம்சங்களாகும். இதற்கு தெரிவு செய்யப்படும் தடிகள் வைரம் கூடியதாகவும், காதுக்கு இனிமை தரக்கூடியதாகவும் காணப்படும். அதாவது கருங்காலி, வீரை, முதிரை போன்ற மரங்களையே தடிகள் செய்வதற்கு பயன்படுத்துவர். இவ் ஆடலானது ஆண்களால் மட்டும் ஆடப்படும். இவ் ஆடலானது கல்யாண வைபவங்களிலும் கத்னா நிகழ்வுகளிலும் பெருநாள் கொண்டாட்டங்களிலும் அதிதிகளை வரவேற்று வருகின்ற நிகழ்வுகளிலும் ஆடப்படுகின்றன. சில கிராமங்களில் பக்கவாத்தியமாக மேளமும் பயன்படுத்தப்படுகின்றது. இதில் 9-18 வகைகள் காணப்படுகின்றன. அம்பாரை மாவட்டத்தில் ஒற்றை மல்லி, இரட்டை மல்லி,ஐந்துவெட்டு, ஏழு வெட்டு, மான் வளையம், தரிதடித்தல், திருமல்லிகை, தேன் கூட்டடி, சுற்றுக்கள்ளி, நாலுவீட்டுக்குச்செல்லுதல். வசந்தன் ஆடும் சிறுவர்கள் முதலில் பிள்ளையாரை வணங்கி பிள்ளையார் வசந்தன் ஆடுவது போன்று களிகம்பு ஆடும் ஆண்கள் பிரார்த்தனை மேற்கொண்ட பின்னரே ஆடத் தொடங்குவர். ஆய்வாளர் அனஸ் அவர்கள் களிகம்பாட்டம் முஸ்லிம் மக்களது வாழ்வியலின் பிரதான கலைவடிமாகவும்,பொழுதுபோக்கு உட்பட மகிழ்வான அனைத்து சந்தர்ப்பங்களின்போது ஆடப்படுகின்றது என கூறியுள்ளார். களிகம்பு கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி தென் மாகாணம், மன்னார், புத்தளம் போன்ற மாவட்டங்களிலும் நிகழ்த்துகை செய்யப்படுகின்றன.

### கிராமியக்கவிகள்

அம்பாரை நாட்டார் பாடல்களில் தனித்துவமான வாய்மொழி இலக்கியமாக விளங்குவது நாட்டார் கவி அல்லது கிராமியக்கவி என அழைக்கப்படுகின்றது. தமிழ்மொழியில் கவி என்பது பாடல், புலவன் என பொருள்படுகின்றது. இவை ஈரடிக்கண்ணிகளைக் கொண்டவை. பெரும்பாலும் அகஒழுக்கத்தைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்டது. மற்றும் அதிகமாக உவமையணிக்கையாள்கையும் அதிகமாக காணப்படும். இது கிழக்கிழங்கையில் காணப்படும் தனித்துவமான ஒரு தமிழ் இசைவடிவமாகும்.
கிராமியக்கவிகளின் சிறப்பம்சங்கள்

1. செய்யுள்களுக்குரிய இலக்கண அமைதி நிறைந்தவை.
2. ஆழமான சொற்களால் பெறப்பட்ட ஆழ்ந்த கருத்துக்களால் ஆனவை.
3. எளிமையாகவும், கற்போர் கருத்தை கவர்ந்தும் நிற்கின்றன.
4. அதிகமாக கற்பனைச்செறிவு காணப்படுகின்றன.
5. பெரும்பாலும் பாலியல்,பெண் உடல் வர்ணணை, காதலர்களின் அறிவுப்புசமிக்ஞையாகவும் காணப்படுகின்றன.

(கந்தையா,வீ.சி:1964:25)

முற்கால மக்களுக்கு ஓய்வு நேரம் அதிகமாக கிடைத்தது. அதாவது ஒரு முறை வேளாண்மை செய்தால் அடுத்த வேளாண்மை செய்யும் வரை ஓய்வு நேரம் கிடைத்தது. அந்த ஓய்வுநேரத்தில் மக்கள் கூத்து, கவி, கிராமிய நடனங்கள் என்பவற்றில் ஈடுபட்டனர். அதிலும் அறுவடைமுடிந்த பின்பு வயலில் வேலைசெய்த ஆண்,பெண் இருபாலாரும் மாட்டுவண்டியில் (கரத்தையில்) செல்லும் போது ஆண்மகன், பெண்மகளைப் பார்த்து நகைச்சுவையாக ஒருவரை ஒருவர் கேலி செய்து போட்டியாக கவிகளை இயற்றி மாறிமாறி பாடிவருவர். பொதுவாக கவிபாடும் சந்தர்ப்பங்களை நோக்கும் போது, வயலில் இரவு வேளையில் காவல் இருக்கும் போது, விதை நெல்லை வயலுக்கு வண்டியில் ஏற்றி வரும் போதும், மக்கள் நடந்து பக்கத்து ஊருக்கு வேலைதேடி செல்லும் போதும் கவிகள் பொழுது போக்கிற்காக உடனேயே இயற்றிப் பாடப்படும்.

### கவிகளின் வகைகள்

கவிகள் சார்ந்து நூல் எழுதி மருதூர் மஜீத் அவர்கள் எழுதிய ‘தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல் கவிகள்’ என்ற நூலில் பாடுகின்ற பொருள் அடிப்படையில் கவிகளை 8 வகையான பிரித்துள்ளார். கவிதொடர்பாக கள ஆய்வு மேற்கொண்ட பின்பெறப்பட்ட கவிகளின் அடிப்படையில் கவிகளை 10 ஆக வகைப்படுத்தக்கூடியதாக உள்ளது. எனவே கவிகளை 10 பிரிவுகளாக பிரித்து பாடிவந்தனர். பாடுகின்ற கருப்பொருளை கொண்டு கவிகள் ஒன்றுக்கு, ஒன்று வேறுபடுகின்றன. இங்கு ஆசைக்கவிகள்(காதல் கவிகள்), இரங்கல் கவிகள், தூதுக்கவிகள், அறக்கவிகள், வசைக்கவிகள், அந்கதக்கவிகள், பொதுக்கவிகள், தாலாட்டுக்கவிகள், வாதுக்கவிகள், ஒப்பாரிக்கவிகள் என்பன காணப்படுகின்றன. பிற்பட்ட காலத்தில் மக்களின் சிந்தனை,செயல் என்பவற்றில் இறைவனை நினைத்து செயற்படும் வகையிலும், தீய செயல்கள், சமூக விரோத செயல்கள் என்பன ஏற்படா வண்ணம் இஸ்லாமியக்கருத்துக்கள், நபிகளது சிந்தனைகள் என்பவற்றை உட்புகுத்தி மக்களை நல்வழிப்படுத்த கவிகள் இயற்றப்பட்டன.

உதாரணம்: இணலுக் கிணலிருந்து
ஏந்திளைக்கு பாலூட்டி
பள்ளிக்கு போக- எனக்கொரு
பலன் தருவாய் ஆண்டவனே.

(கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக்கவியமுதம்,பக்-159)

இது மக்களது உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும், காதலன், காதலி மீது ஏற்பட்ட ஊடலின் போது சமாதானப்படுத்தும் பொருட்டு செய்தியினை பரிமாறும் தொடர்பாடல் ஊடகமாகவும், வயலில் வேலை செய்யுபோது தனது கவலை, உடல்களைப்பு என்பவை மறக்கும் பொருட்டு பாடப்படும் மருந்தாகவும், இறை சிந்தனை, ஒழுக்கம், அறக்கருத்துக்களை சொல்லி மக்களை நல்வழிப்படுத்தும் நெறியாளராகவும், காவற்பரணில் இரவு வேளையில் காவலுக்கு சென்று தனிமையில் வாடும் இளைஞன் தன் பாலின உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் கவிகள் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்பட்டன. இவை தற்காலத்தில் மருவிக்கொண்டு வந்தாலும் கவியரங்குகள் நடந்து கொண்டு வருவதனையும் அவதானிக்ககூடியதாக உள்ளது.

**மாப்பிள்ளை வாழ்த்துப்பாடல்( மாப்பிள்ளை பைத்)**

முஸ்லிம் திருமணங்களின் போது பல சடங்கு சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அதாவது மாப்பிள்ளை பேசி மோதிரம் போடுதல், பெட்டி கொண்டு செல்லல், செப்புக் கொண்டு போதல், கல்யாணத்தன்று மணப்பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் மருதோண்டிபோடுதல், காவின் (பதிவு)எழுதி மாப்பிள்ளையின் கால்களைக் கழுவுதல், கால்களை கழுவிய மைத்துனருக்கு மோதிரம் அல்லது பணம் பரிசாகக் கொடுக்கப்படும், ஆரார்த்தி எடுத்தல், வெள்ளை விரித்தல், மாப்பிள்ளையை வீட்டினுள் அழைத்துச் செல்லல், தாலி கட்டுதல், பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கு பால்,பழம் கொடுத்தல், புலவர் வாழ்த்துப்பாடல் பாடுதல். இவ்வாறு திருமணம் சார் சடங்குகளுடன் இடம்பெறும். ஆனால் தற்காலத்தில் இச் சடங்குகளில் சில மருவி விட்டன. மற்றும் பெண் வீட்டிற்கு மாப்பிள்ளை வந்து சேர்ந்தவுடன் அங்கு முன்வாசலில் அமைக்கப்பட்ட பந்தலின் கீழ் ஓர் ஆசனத்தில் அமர்ந்த பின்னர், புலவர் வாழ்த்துப்பாட ஆரம்பிப்பார். இம்மரபு தற்காலத்தில் மாப்பிள்ளை பைத் என வாழ்த்துமடல் பாடி மணமகனுக்கு கொடுக்கப்படும். ஆனால் இம் முறை இந்து திருமணத்தில் போது மணமக்கள் இருவருக்குமே வாழ்த்துமடல் வழங்கப்படும்.

அக்கரைப்பற்று முஸ்லிம் கலாசார நிலையத்தில் கலைகளை கற்பிக்கின்ற தையூப், நைஸார் ஆகிய இசை ஆசிரியர்கள் மாப்பிள்ளை பைத் வழக்கொழியாமல் இருக்க, காலாசார நிலையத்திற்கு வருகை தருகின்ற மாணவர்களை கொண்டு மாப்பிள்ளை பைத் பாடலை பாடவும்,ஆடவும் நெறியாள்கை செய்கின்றனர். இதனால் மாப்பிள்ளை பைத் எனும் கலைவடிவம் பயில் நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை போன்ற ஊர்களில் செல்வந்த வீட்டு திருமணங்களிலும் பொது நிகழ்வுகளிலும் இது ஆற்றுகை செய்யப்பட்டு, ஆற்றுகையில் ஈடுபடுகின்ற இளைஞர்களுக்கு பகுதி நேர தொழிலாகவும் காணப்படுவதனை கள ஆய்வின்போது அறியக்கூடியதாக இருந்தது.

லாயிலாஹ இல்லல்லாஹீ -- லாயிலாஹ இல்லல்லாஹ
ஆதம் கண்டுப்போடியாரின் அருமை மகள் அப்துல் காதர்
பெருமையுள்ள பேரழகன் - மாப்பிள்ளையாய் வருகிறாரே
சீப்பு மரைக்கார் சின்ன லெவ்வை செல்வப்புதல்வி சீனத்தும்மா
வன்னமான பெண் இவர்க்கு வந்து வாற்த்த சோடியாமே

(நேர்காணல்: தையூப், வயது-50, இசை ஆசிரியர், அக்கரைப்பற்று)

**முனாஜாத்துப்பாடல்கள்**

**‘**முனாஜாத்’ என்பது முறையீடு எனப்பொருள்படும். இப்பாடல்கள் முன்னைய காலங்களில் நோன்பு காலத்தில் அதிகாலை எழுந்தே நோன்பினை நோற்க வைப்பதற்காக அதிகாலையில் பாவாக்கள் எனப்படும் குழுவினர் ஊர் முழுவதும் றபான் கொட்டி, இஸ்லாமியக் கோட்பாடுகளை கூறுகின்ற பாடல்களைப் பாடி, இடைஇடையே ஏய்,கொம்,ம்… என்ற ஓசைகளையும் எழுப்புவர். இவ்வாறான முனாஜாத்துப் பாடல்களை, பாடி மக்களை அதிகாலையில் எழும்பச்செய்து நோன்பினை பிடிக்க உதவுவர். . இப்பாடல்கள் 23 அடிகளை கொண்ட பாடல்களாகும்.

லா இலாஹ இல்லலாஹீ
யாரிபா யாரிபா
யாரிபா வாருங்கள்
பாரில் நாங்கள் பலன்பெறவே
பாதுஹாவே வாருங்கள்…..

(அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் இடையே வழக்கில் உள்ள இசைவடிவங்கள், பக்-56)

**வழிநடைச்சிந்துப்பாடல்கள்**

வழிநடைச்சிந்துப்பாடல்கள் என்பது மக்கள் நடந்து நீண்டதுாரம் செல்கின்ற போது தனது உடல்சோர்வு, களைப்பு தெரியாமல் இருக்க தனது மனஉட்கிடக்கைகள், குறிப்பிட்ட இடத்தின் தோற்ற வர்ணனை, நகைச்சுவை அம்சங்களை உள்ளடக்கி அனைவரதும் உடல்களைப்பையும் மறந்து செல்லவேண்டிய

பயணத்தை இனிதே சென்றடையும் வரை பாடப்படும் பாடல்கள் வழிநடைச்சிந்துப்பாடல்கள் எனப்படும். இவை உரையாடலாகவும், கேள்விக்கு, விடை கூறுவது போன்றும் காணப்படும் (கோபிநாத்,த:2020:128).

**வழிநடைச்சிந்துப்பாடல்களின் கட்டமைப்பு**

வழிநடைச்சிந்துப்பாடல்கள் லௌகீக வாழ்வியலைச் சுட்டி நிற்கின்றது. முஸ்லிம் கணவன் தனது மனைவி, சொந்தங்களை கூட்டிக்கொண்டு கால்நடையாக ஏரி, மலை, காடு கடந்து கல்லோயா பாலம் அமைக்கப்படுவதனை பாடி, நகையாடி சென்றனான். மனைவி களைப்படையும் போது கணவன் அவளை சமாதானப்படுத்த நகைச்சுவை சார் விடயங்களை கூறி, கொண்டு வந்த உணவுப்பொதியினை உண்டு, பின்னர் கல்லோயா நோக்கி செல்வர். இவ் வாய்மொழி இலக்கியம் முற்றாகவே மறைந்து விட்டது. இதனை கள ஆய்வின் போது நிந்தவூரைச் சேர்ந்த எஸ். முத்துமீரான் இதனைப்பற்றி கூறினார் (நேர்காணல்: முத்துமீரான்.எஸ், வயது-75, சட்டத்தரணி, நிந்தவூர்).

**கல்லோயா செல்வோம் வழிநடைச்சிந்து**

கல்லோயாத்திட்டம் (கல்-ஓய) என்ற அபிவிருத்தித் திட்டம் ஆரம்பமான போது அதனைப்பார்க்க ஏராளமான மக்கள் கால்நடையாக அங்கு இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்களை பார்வையிட சென்றனர். அங்கு முக்கியமான மத்திய நிலையமாக இங்கினியாகல எனும் இடம் காணப்பட்டது. மற்றும் அங்கு “ சேனநாயக்க சமுத்திரம்” இயந்திரங்கள், வெளிநாட்டு அதிகாரிகள், உள்நாட்டு அதிகாரிகள் என்போர் பணிபுரிகின்ற இயற்கைச் சூழலை பார்வையிட அம்பாரை மாவட்ட முஸ்லீம் மக்கள் பல உணவுப்பொதியோடு, நீர் என்பவற்றையும் எடுத்துக்கொண்டு ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வழிநடையாகச் செல்லும் போது களைப்பு தெரியாமல் இருக்கவும், பெண்கள் விரைவாக களைப்பு அடைந்து விடுவதனை அறிந்த ஆண்கள் தனது மனைவிமாரை, சகோதரிகளை, தாய்மாரை மகிழ்ச்சியடைய வைக்க செல்கின்ற இடத்தினையும், செல்வோரையும் நகைச்சுவையாகப் பேசிப்,பாடி வழிநடையாக செல்வர். **(கோபிநாத்,த:2020:128)**

“ இங்கினியாக்கல்லு பார்க்க
எட்டி நடந்து வா தேனே
இங்கினியாக்கல்லு பார்க்க
எருந்துமே என் சொல் கிளிமொழியாளே
நடந்துவா, பஞ்சிடப்படாமலே ஓடி நடந்துவா நீ
எட்டி நடந்துவா தேனே………” (கிராமத்து இதயம்: 119-123)

பொதுவாக “வழிநடைச்சிந்துகள்” என்பது முன்னைய காலங்களில் போக்குவரத்து செய்வதற்கு வாகனங்கள் இல்லாதவேளையில் தூரத்துப்பயணங்கள் மேற்கொள்ளும் மக்கள் களைப்புத்தெரியாமல் இருக்க பாடிய பாடல்கள் எனலாம். இவை சாதாரண மக்களால் அதிகமாக பாடப்பட்டமையால் எளிமையான மொழிநடை, நகைச்சுவையான கருத்துக்கள், சாதாரண மெட்டமைப்பு, இடைஇடையே உரையாடல்கள் என்பன காணப்படும் இப்பாடல்களைப் பொறுத்தவரையில் பயணங்கள் மேற்கொள்ளும் போது பாடப்பட்ட பாடல்கள் “ வழிநடைச்சிந்துகள்” எனப்பட்டன. இங்கு சிந்து என்பது பாடல் எனும் பொருளைத் தருகின்றது. இங்கு பெண்ணை இனியான வார்த்தைகளைக் கூறி ஆற்றுகைப்படுத்துவதாகவும், வட்டார வழக்குச்சொற்களையும் பயன்படுத்தி தமது தனித்துவமான சொல்லாடல்களையும் இப்பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

**அம்பாரை மாவட்டத்தில் காணப்படும் முஸ்லிம் கலைவடிவங்களின் பங்களிப்புகள்.**

இங்கு பல முஸ்லிம் நாட்டார் கலைவடிவங்கள் தோன்றுவதற்கு பிரதான காரணம் இம்மக்களது பழமைபேணும் பண்பு ஆகும். இக்கலை வடிவங்கள் மூலம் ஏராளமான வட்டார வழக்குச்சொற்கள் தற்காலத்திலும் பயில்நிலையில் காணப்படுகின்றன. இவ் வட்டார வழக்குச்சொற்கள் தனித்துவமான நாட்டார் சொல்லாடலாகவும், தனித்துவமான வாய்மொழி இலக்கிய மரபினை உருவாக்கும் வகையில் காணப்படுகின்றன. இச்சொற்கள் நாடகப்பாங்காக பேசுவதற்கு பொருத்தமான ஓசை நயத்தை கொண்டுள்ளது.( சீனத்தும்மா, கம்மிய,…. போன்ற சொற்களை கூறலாம். ) பல நாட்டார் மெட்டமைப்புகளுக்கு ஏதுவாக அமைந்துள்ளது.

இக்கலைவடிவங்கள் மூலம் இஸ்லாமிய சமயக்கருத்துக்கள், நபிகளது போதனைகள், அறபுமொழி சொற்களை கலைவடிவங்களில் சேர்த்தல் என கலைஞர்கள், கவிஞர்கள் தங்களது சமூகத்தினருக்கு கூறவேண்டி செய்திகளை கலைவடிவங்கள் மூலம் அறிவித்துள்ளனர். அத்துடன் கலைவடிங்களில்

கூறப்படுகின்ற விடயங்கள் அதிகமாக சமயம் சார்ந்தே காணப்படுகின்றன. அதாவது முஸ்லிம் மக்கள் தமது சமயத்தில் கூறப்படுகின்ற விடயங்களை எதுவித பரிசீலனையும் செய்யாமல், விவாதிக்காமல் அவர்களது புனித நூலில் கூறப்பட்ட விடயங்களை கடைப்பிடிப்பர். இதனால் இவர்களது வாழ்வியலில் உருவாக்கப்பட்ட கலைவடிவங்கள் அதிகமாக சமயம் சார்ந்தும், குறைந்தளவு லௌகீகம் சார்ந்து உருவாக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் மக்களது அதீத சமயப்பற்று காரணமாக லௌகீகத்தை பேசும் கலைவடிவங்கள் அதிகமாக மருவிய வண்ணம் காணப்படுகின்றன.

இக்கலைவடிவங்களில் நாகரிக மாற்றம், தொழிநுட்ப மாற்றம், என்பனவற்றால் எதுவித மாற்றங்களும் ஏற்படாத வண்ணம் காணப்படுகின்றன. முஸ்லிம் மக்களது தனித்துவம், பழைபேணும் பண்பு, கலாசாரம், பழக்கவழக்கம், கட்டுப்பாடான வழக்காறுகள் , நடத்தை கோலங்கள் என்பனவற்றை நினைவூட்டும் அறிவிப்பு சமிக்ஞையாக கலைவடிவங்களின் கருப்பொருள், உருவாக்கம் என்பன காணப்படுகின்றன. இவ்வாறான பங்களிப்புகளை முஸ்லிம் கலைவடிவங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கியுள்ளன.

**முஸ்லிம் கலைவடிவங்கள் பயில் நிலையில் நிலைத்து நிற்பதற்கு ஆய்வாளரது பரிந்துரைகள்**

- தென் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரிகளிலும் பாடத்திட்டத்தில் முஸ்லிம் கலைவடிவங்களை உள்வாங்கப்படலும் அதனை கலைகள் பீடம், நுண்கலைப் பீடங்களிலும் செயற்படுத்தலும்
- பாலர் பாடசாலை, மதரஸா, பாடசாலை, கலாசார நிலையங்கள் மட்டங்களில் சிறியவர் முதல் இளைஞர் வரை அனைவரும் கலைவடிவங்களை கற்ககூடிய சூழலை உருவாக்குதல்.
- பாவாக்கள், இசைக்கருவி வாசிப்போர், கலைவடிங்களை நெறியாள்கை செய்வோர், கவிஞர்கள் என அனைவரது பொருளாதாரத்தையும் பேணும் வகையில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்.
- முஸ்லீம் கலைவடிங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு, அவற்றை இளஞ்சமுதாயத்தினரிடம் ஒப்படைத்தல்.

## 2. முடிவுரை

அம்பாரை மாவட்டத்தில் பல்லின சமூக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் முஸ்லீம் மக்களது பழக்கவழக்கங்கள், கலாசாரப்பின்னணி, வழக்காறுகள், உணவுக்கலாசாரம் என்பன முற்றிலும் வேறுபடுகின்றன. இவர்கள் சமயத்தின்பால் அதீத அக்கறையும், ஈடுபாடும் கொண்டவர்கள். இதனால் இவர்கள் மத்தியில் காணப்படும் கலைவடிவங்கள் பெரும்பாலும் இஸ்லாமிய சமயம் சார்ந்தும், சிறிதளவு லௌகீகம் சார்ந்தும் காணப்படுகின்றன. மேலே கூறப்பட்ட கலைவடிவங்களைவிட விருத்தம் பாடுதல், இஸ்லாமிய கீதங்கள், கவ்வாலி இசை, காவியங்கள், கப்பல்பாட்டு, பதம் பாடுதல் என ஏராளமான கலைவடிவங்கள் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. இருந்த போதிலும் கலைவடிவங்களின் உருவாக்கம், ஆற்றுகை, என்பவற்றை ஆதரித்து அல்குரான் , ஹதீஸ் என்பவற்றில் தெளிவான விளக்கம், ஆதரிப்பு என்பன பற்றி தெளிவான பதிவுகள் கிடையாது என களஆய்வின் போது ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் ஏராளமான கலைவடிவங்கள் இஸ்லாமிய சமயக் கருத்துக்களை உள்ளடக்கியே காணப்படுகின்றன என்றால் அதனை யாராலும் மறுக்கமுடியாது. அம்பாரை மாவட்ட முஸ்லிம் கலைவடிவங்கள் மருவிகொண்டு செல்கின்றன. சில முஸ்லீம் ஊர்களில் (அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை) கலைவடிவங்கள் பயில் நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் ஆற்றுகையும் செய்யப்படுகின்றன. சில கலைவடிவங்கள் சிறுவர்கள், இளைஞர்களை கொண்டு முஸ்லிம் கலாசார போட்டி, அழகியல் போட்டி, தமிழ் தினப் போட்டி என்பவற்றிற்காக நெறியாள்கை செய்யப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டு போட்டியின் நிமித்தம் ஆற்றுகை செய்யப்படுகின்றன. சில ஊர்களில் மக்கள் கலைவடிவங்கள் இஸ்லாமிய சமயத்திற்கு முரணானவை எனும் உளப்பாங்குடன் வாழ்கின்றனர். இதனால் கலை வடிவங்களின் உருவாக்கம், ஆற்றுகை என்பன தடைப்படுகின்றன. அத்துடன் இளஞ் சமுதாயத்தினருக்கு கலைவடிவங்கள் பற்றிய வழிகாட்டல்கள், புரிதல் என்பன கிடைக்கப்பெறுவதில்லை. இதனால் மாறிவருகின்ற நவீன தொழில்நுட்ப யுகத்தில் பல புதிய பொழுதுபோக்கு விடயங்கள் மத்தியில் கலைவடிவங்களின் நிலவுகை வீழ்ச்சிநிலையை அடையும் தன்மையில் காணப்படுகின்றன. இவ்வாறான முஸ்லிம் கலைவடிவங்கள் சமயத்திற்கு முரணானவை அல்ல என்னும் உளப்பாங்குடன் மக்கள் தெளிவுடன் சிந்திக்க தொடங்கும் போது ஆரோக்கியமான ஏராளமான முஸ்லிம் கலை வடிவங்கள் முஸ்லிம் சமுதாயத்தின் தொன்மை, சிறப்பு என்பவற்றை பறை சாற்றும் அறிவிப்பு சமிக்ஞைகளாகவும், இளஞ் சமுதாயத்தினருக்கு இஸ்லாமிய வழக்காறுகளையும்,

நம்பிக்கைகளையும் இலகுவாக விளங்க வைக்கும் ஊடகமாகவும் திகழும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. தொகுத்து நோக்கும் போது அம்பாரை மாவட்டத்தில் ஏராளமான கலைவடிவங்கள் பயில் நிலையில் காணப்படுகின்றன. இருந்த போதிலும் சில ஊர்களில் முஸ்லிம் கலைவடிங்கள் மருவிய கொண்டு, வழக்கொழிந்து வருகின்றன. இவற்றை தடுத்து அம்பாரை மாவட்டத்தில் அனைத்து முஸ்லிம் கலைவடிவங்களும், அனைத்து முஸ்லிம் ஊர்களிலும் பயில் நிலை இருக்க தக்கதாக செயற்பட வேண்டும் என்பதனை இவ் ஆய்வுக்கட்டுரை வலியுறுத்தி நிற்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**

அனஸ்,எம்.எஸ்.எம்.(2007). இலங்ககை முஸ்லிம் நுண்கலை ஒரு விமர்சன ஆய்வு,குமரன் புத்தக இல்லம். கொழும்பு.

கந்தையா, வீ.சி. (1964). மட்டக்களப்புத் தமிழகம். ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம். யாழ்ப்பாணம். முதற்பதிப்பு.

மஜீத்,ஏ.(2007). தென்கிழக்கு முஸ்லீம் தேசத்தாரின் நாட்டாரியல், மருதூர் வெளியீட்டுப் பணிமனை. சாய்ந்தமருது.

முத்துமீரான்,எஸ். (1991). கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம். மீரா உம்மா நூல் வெளியீட்டகம். நிந்தவூர். சென்னை.

முத்துமீரான், எஸ். (2007). இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப்பாடல்கள். நேசனல் பப்ளிசர்ஸ்.

முத்துமீரான்,எஸ்.(2013). கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும், வாழ்வாதாரங்களும். மீரா உம்மா நூல் வெளியீட்டகம். நிந்தவூர். முதற்பதிப்பு.

முத்துமீரான்,எஸ்.(2005).இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள். நேசனல் பப்ளிசர்ஸ். சென்னை. முதற்பதிப்பு.

வித்தியானந்தன்,சு.(1960). மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு. முதற்பதிப்பு.

**ஆய்வேடுகள்**

கோபிநாத், த. (2021). இலங்கை மட்டக்களப்புத் தமிழர் வாழ்வியலில் இசை- ஓர் ஆய்வு. முதுதத்துவமாணி பட்ட ஆய்வேடு. இசைத்துறை. அண்ணாமலைப் பல்கலைக்கழகம். சிதம்பரம்.

நௌஷாத், எஸ். (2012). அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் இடையே வழக்கில் உள்ள இசைவடிவங்கள். நுண்கலைமாணி பட்ட ஆய்வேடு. இசைத்துறை. சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம். கிழக்குப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுக்கட்டுரைகள்**

அஸ்மர் ஆதம். ஏ.எல். (2022) சமகால கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களின் வாழ்வியலில் ஆடையும் அரேபிய கலை கலாசாரத்தின் ஆதிக்கமும்- ஓர் ஆய்வு. ஐந்தாவது ஆவது பன்னாட்டுக் கருத்தரங்கம். சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம். கிழக்குப் பல்கலைக்கழகம்.

இஃப்பத் நீதா.உ.லெ. (2017). இறக்காம பிரதேசத்து களிகம்பு நடனம்: அச்சுறுத்தலுக்குள்ளாகும் தொட்டுணரமுடியாத மரபுரிமை. இரண்டாவது பன்னாட்டுக் கருத்தரங்கம். சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

**நேர்காணல் கண்டோர் விபரங்கள்**

1. நேர்காணல்: தையூப், வயது-50, இசை ஆசிரியர், அக்கரைப்பற்று.
2. நேர்காணல்: முத்துமீரான்.எஸ், வயது-75, சட்டத்தரணி, நிந்தவூர்
3. நேர்காணல்: நைஸார்.எஸ், வயது-45, இசை ஆசிரியர், அக்கரைப்பற்று.
4. நேர்காணல்: கபீல் எஸ்.எல்.எப்., வயது-36, இசை ஆசிரியர், அக்கரைப்பற்று.
5. நேர்காணல்: நஸ்மல்.எஸ்.எல்.எம், வயது-43, அறபுத்துறை, விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.
6. நேர்காணல்: முஹம்மட் ஹில்பான், வயது-33, விரிவுரையாளர், இஸ்லாமியக் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.